உ
சிவமயம்

## யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
## அச்சுவேலி.

# பரிசில் நாள் - 2013-2014

**காலம்:- 28.10.2015 புதன்கிழமை**
**நேரம்:- பி.ப.1.00மணி**
**இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்**

## தலைமை

**திரு.சி.ரவிச்சந்திரன்**
பாடசாலை முதல்வர்.

## பிரதம விருந்தினர்

**திரு.த.இராசலிங்கம்**
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக்கல்வி, வடமாகாணம்.

## சிறப்பு விருந்தினர்கள்

**திரு.நா.சுவாமிநாதன்**
ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி.

**திரு.செ.சிவலிங்கராஜா**
ஓய்வுபெற்ற அதிபரும், முன்னாள் ஆசிரியரும்.
[ யா/ப.இ ] வித்தியாலயம்.

**திருமதி.க.கண்மணி**
ஓய்வுநிலை ஆசிரியர்.

**திரு.க.சந்திரபோஸ்**
முன்னாள் வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவரல்.
- மங்கல விளக்கேற்றல்.
- கொடியேற்றம்.
    - ☞ தேசியக் கொடி ஏற்றல்.
    - ☞ பாடசாலைக் கொடி ஏற்றல்.
- இறை வணக்கம்.
    - ☞ பாடசாலை மாணவர்கள்.
- தமிழ்த்தாய் வாழ்த்து
- ஆசியுரை
- வரவேற்பு நடனம்.
- வரவேற்புரை.
- அதிபர் அறிக்கை.
- விருந்தினர்கள் உரை.
- பரிசளிப்பு.
- நன்றியுரை.
- கலைநிகழ்வுகள்.
- கொடியிறக்கம்.
- பாடசாலைக் கீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களை வணங்கி இன்றைய பரிசில் நாள் அறிக்கையை வாசிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய இவ் விழாவிற்கு வருகை தந்துள்ள பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இளங்கதிர் சனசமூகமன்ற உறுப்பினர்கள், பெற்றோர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் வருக வருகவென வரவேற்று எனது அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய எமது விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஆரம்பக் கல்விப் பிரிவின் ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.தம்பையா இராசலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலும் கற்ற பெரதெனியா பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாவார். இவர் ஒரு ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, யாழ்வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளராக தன் சேவையால் உயர்ந்து மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளராக பதவி வகித்து கடந்த 18.10.2015ல் ஓய்வு பெற்றுள்ளார்.

இன்றைய எமது விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்தமைக்காக நன்றி கூறி, அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் திரு.நா.சுவாமிநாதன் அவர்கள் விஞ்ஞான ஆசிரியராக, வெளிக்கள நிலையப் போதனாசிரியராக, ஆரம்பக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் நீண்ட காலத்திற்குப் பின்னர் தனது கடும் முயற்சியால் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவியை சித்திபெறச் செய்த ஆசிரியை திருமதி.கோ.கருணாகரன் அவர்களை எமது பாடசாலை பெற்றுக்கொள்வதற்கு இவரின் பங்களிப்பு முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கும் எனது நன்றிகளைக் கூறுகின்றேன்.

எமது விழாவின் விருந்தினர்களுள் ஒருவராக வந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.செ.சிவலிங்கராஜா அவர்கள் எமது பாடசாலையில் 1978ம் ஆண்டளவில் ஆசிரியராகக் கடமையாற்றி, உதவி அதிபராகவும் கடமையாற்றியவர். உடுப்பிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஒரு ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்று தங்போது வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். இவரது சேவை எமது பாடசாலைக்கு இன்னும் அவசியமானது என்றும், அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

இன்றை விழாவின் விருந்தினராக சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி.க.கண்மணி அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவி, ஓய்வு பெற்ற ஆசிரியர். அதுமட்டுமன்றி எமது பாடசாலையின் பெரும் நலன்விரும்பியுமாவார். எமது அன்றாடக் குறைநிறைகளைக் கேட்டறிந்து தன்னாலான உதவிகளை வழங்கி வருகிறார். இன்றைய நிகழ்விற்குக்கூட இவரின் பங்களிப்பு போற்றத்தக்கதாகும். தள்ளாத வயதிலும் தன்னலமற்ற சேவையை மாணவர்களுக்காக வழங்கும் இவரது பணிகள் மேலும் சிறக்க வேண்டும் எனவும், இவர் இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என்றும் இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

அடுத்து எமது விருந்தினராக வீற்றிருக்கும் திரு.க.சந்திரபோஸ் அவர்கள் ஒரு தன்னலமற்ற சமூகசேவையாளர். எமது பாடசாலை நலன்விரும்பி. பத்தமேனி விவசாய சம்மேளனச் செயலாளர், பல வழிகளில் எமது பாடசாலை வளர்ச்சியில் பங்கு கொள்பவர். அவரிற்கும் இந்நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் இந்நேரத்தில் மீண்டும் ஒருமுறை வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை.

01) ஆரம்பப்பிரிவு மாணவர் தொகை:

(தரம் 01 - தரம் 05வரை)

ஆண்கள் - 15

பெண்கள் - 14

மொத்தம் - 29

02) இடைநிலைப் பிரிவு மாணவர் தொகை:

(தரம் 06 - தரம் 09வரை)

ஆண்கள் - 16

பெண்கள் - 08

மொத்தம் - 24

மொத்த மாணவர் தொகை :- 29 + 24

= 53.

## எமது ஆசிரியர் குழாம்

1) திரு. சிவஞானம் ரவிச்சந்திரன் - (அதிபர்)

S.L.P.S (II), B.Sc, Dip.in. Ed.

2) திரு. சின்னத்தம்பி கங்காதரன் - (உப அதிபர்)

S.L.T.S (2-II), B.Ed.

3) திருமதி. தவமணிதேவி சுவாமிநாதன்

S.L.T.S (I) BA D.P.in Ed.

4) திருமதி. கோணேஸ்வரி மதிவர்ணன்

S.L.T.S (2-I) Science Trained.

5) திருமதி. செல்வமணி செல்லத்துரை

S.L.T.S (2-I) Music Trained.

6) திருமதி. கமலராணி இராஜரஞ்சன்

S.L.T.S (2-I) Primary Trained.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) திருமதி.கோமளா கருணாகரன்

S.L.T.S (2-II) B.Ed.

8) திருமதி.மணிமேகலை அருளேந்திரன்

S.L.T.S (2-II) Tamil Trained.

9) திரு.இராசரத்தினம் சரவணபவன்

S.L.T.S (3-I) NDT - Tech,B.A

10) திருமதி.சுமைலியா சத்தியதாசன்

S.L.T.S (3-I) NDT - Music.

11) திரு.காசிநாதன் சயந்தன்

S.L.T.S (3-I) NDT - Maths.

12) திருமதி.வேந்தன் துளசிகா

G.C.E.(A/L), B.A (final) (Externa)

13) திருமதி.விஜிதா சிவச்சந்திரன் (முன்பள்ளி ஆசிரியர்)

முன்பள்ளி Diploma

## எமது ஆசிரியக் குழாத்துடன் 2014, 2015ல் புதிதாக இணைந்து கொண்டோர்.

1) திரு.சிவஞானம் ரவிச்சந்திரன் - (அதிபர்)

S.L.P.S (II), B.Sc, Dip.in. Edu.

2) திருமதி.கமலராணி இராஜரஞ்சன்

S.L.T.S (2-I) Primary Trained.

3) திருமதி.கோமளா கருணாகரன்

S.L.T.S (2-II) B.Ed.

4) திருமதி.மணிமேகலை அருளேந்திரன்

S.L.T.S (2-II) Tamil Trained.

5) திரு.காசிநாதன் சயந்தன்

S.L.T.S (3-I) NDT - Maths.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது ஆசிரியக் குழாத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றோர்.

1) திரு.சுப்பையா மேகனராஜன் (அதிபர்)

B.A (Hons) Econs, PGDE, M.Ed, SLPS (II)

2) திருமதி.வசந்தாதேவி சண்முகநாதன்

S.L.T.S (2-I) Primary Trained.

3) திருமதி.சாந்தினி விஜயவரதன்

S.L.T.S (2-I), B.Ed, Primary Trained.

## வாழ்த்துக்கள்

எமது பாடசாலையின் உப அதிபரான திரு.சின்னத்தம்பி கங்காதரன் அவர்கள் கடந்த வருடம் தேசிய கல்வி நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் கல்விமானி (B.Ed) பட்டம் வழங்கிக் கௌரவிக்கபட்டுள்ளார். அத்துடன் ஆசிரியரான திரு.இராசரத்தினம் சரவணபவன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரி அலகினால் கலைமானி (B.A) பட்டம் பெற்றுள்ளார். இவ்விரு ஆசிரியர்களும் கல்விப் புலத்தில் மேலும் சிறந்து விளங்க எமது பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் தம்மால் முடிந்தவரை தன்னலமற்ற சேவையை வழங்கி வருகின்றனர். இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு வரும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் செயற்பாடுகள்

நேர சூசிக்கும் மேலதிகமாக HOP செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. பலதரப்பட்ட வளவாளர்களின் உதவியுடன் மாணவர்கள், ஆசிரியர்களின் உயர் மட்ட கல்விச் செயற்பாட்டு விருத்திக்காகப் பல செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மேலும் பல ஆசிரியர் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பாகப் பல வருடங்களின் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேலே பெறவைத்து சித்தியடையச் செய்தமைக்காக வகுப்பாசிரியர் திருமதி.கோ.கருணாகரன் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு இவருக்கு உதவியாக இருந்த ஆசிரியர்களான ம.அருளேந்திரன், சி.கங்காதரன் ஆகியோரையும் பாராட்டுகின்றேன்.

## பெறுபேறுகள்

01) தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு.

| ஆண்டு | சித்தி வீதம் |
|---|---|
| 2013 | 50% |
| 2014 | 20% |
| 2015 | 60% |

70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்.

| ஆண்டு | மாணவர் பெயர் | |
|---|---|---|
| 2013 | சு.கார்த்தீபன் | 113 |
| 2013 | ந.வினுசன் | 100 |
| 2013 | இ.சுபாங்கன் | 86 |
| 2014 | ஜெ.ஜென்சிகா | 74 |
| 2015 | ஜெ.லிதுசா | 154 |
| 2015 | ஜெ.கஜந்தன் | 74 |
| 2015 | இ.ஜீவதர்சினி | 71 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) தரம் - 09 மாகாணமட்டப் பொதுப் பரீட்சை.

| பாடம் | 2013 | 2014 |
|---|---|---|
| தமிழ்மொழி | 100% | 66.6% |
| சைவசமயம் | 100% | 83% |
| கணிதம் | 66.6% | 83.3% |
| விஞ்ஞானம் | 88.8% | 66.6% |
| ஆங்கிலம் | 100% | 50% |
| வரலாறு | 88.8% | 66.6% |
| புவியியல் | 100% | 83.3% |
| சங்கீதம் | 88.8% | 83.3% |
| சுகாதாரம் | 100% | 66.6% |
| குடியுரிமைக்கல்வி | 100% | 83% |
| தொழில்நுட்பம் | 100% | 66.6% |

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்.

எமது மாணவர்களின் ஆளுமையை வெளிக்கொணரவும், தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்யவும் விளையாட்டுத்துறை, மன்றங்கள் போன்றன செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## விளையாட்டுத்துறை.

இத்துறையின் பொறுப்பாசிரியராக திரு.சி.கங்காதரன் அவர்கள் சிறப்பாகவும், திறமையாகவும், திறம்படச் செயற்பட்டு வருகின்றார். இவரின் தலைமையிலும் வழிகாட்டலிலும் வருடாவரும் எமது மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் இல்ல மெய்வல்லுநர் போட்டியானது மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இப்போட்டிக்குப் பெரிதும் சிறப்பாக எமது பாடசாலையின் மேலைத்தேய வாத்திய அணி (பான்ட்) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு துணை நிற்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றங்கள் / பாடம் சார் மன்றங்கள்

எமது பாடசாலையின் மாணவர் தொகையைக் கருத்தில் கொண்டு ஆரம்பப்பிரிவு மாணவர் மன்றம், இடைநிலைப்பிரிவு மாணவர் மன்றம் என இரண்டு பிரிவுகளாக மன்றங்கள் பிரிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. ஆரம்பப் பிரிவு மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.க.இராஜரஞ்சன் அவர்களும், இடைநிலைப்பிரிவு மாணவர் மன்றப் பொறுப்பாசிரியராக திருமதி.த.சுவாமிநாதன் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

வாரத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் ஒவ்வொரு பாடத்திற்கான மன்றங்கள் வகுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த வகையில் தமிழ்மன்றம், சமய சங்கீத மன்றம், விஞ்ஞான கணித மன்றம், ஆங்கில மன்றம், ஆரம்பக்கல்வி மன்றம் என்கின்ற ரீதியில் மன்றங்களானது வகுக்கப்பட்டுள்ளது.

இம்மன்றங்களுக்குப் பொறுப்பாசிரியர்களாக இடைநிலைப் பிரிவில் அந்தந்தப் பாடங்களுக்குரிய ஆசிரியர்களும், ஆரம்பப் பிரிவில் அனைத்து ஆசிரியர்களும் செயற்பட்டு வருகின்றனர். மாணவர்களின் ஆளுமை, தற்துணிவு, திறமை போன்ற விடயங்களை வெளிக்கொணரும் வகையில் இம்மன்றங்களின் செயற்பாடுகளானது அமைந்துள்ளது. இம் மன்றங்களின் செயற்பாடுகளானது மென்மேலும் வளர்ச்சி பெற எனது வாழ்த்துக்களை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சுற்றாடற் கழகம்

எமது பாடசாலையின் சுற்றாடல் கழகப் பொறுப்பாசிரியர்களாக திருமதி.கோ.மதிவர்ணன், திரு.இ.சரவணபவன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இம் மன்றத்தினால் பாடசாலையின் அகச்சுத்தம், புறச்சுத்தம் சார்ந்த பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சிரமதானச் செயற்பாடுகள், பாடசாலை வெளிப்புறச் சூழலை அழகுபடுத்தும் விதமாக பயனுள்ள மரங்களை நாட்டுதல், பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களை நாட்டுதல், நிழல் மரங்களை நாட்டுதல் போன்ற செயற்பாடுகளும் மாதாமாதம் பாடசாலையைச் சுத்தம் செய்யும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம்மன்றத்தின் செயற்பாடானது மென்மேலும் சிறப்புற எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இந்து மாணவர் மன்றம்

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.சு.சத்தியதாசன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இம் மன்றத்தினால் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆராதனையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடாத்தப்பட்டு வருகின்றது.

மேலும் நவராத்திரி காலங்களில் மாணவர்களிடையே போட்டிகளை நடாத்தியும் பரிசில்களை வழங்கியும் மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றது. அத்தோடு சைவபரிபாலன சபை பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் .இம் மன்றம் பெரிதும் பங்காற்றுகின்றது. இம் மன்றத்தின் செயற்பாடுகள் வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன்.

## நூலக மன்றம்

இதற்குப் பொறுப்பாக எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி.த.சுவாமிநாதன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இம் மன்றத்தினால் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முகமாக ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மாணவர்களிடையே போட்டிகளும் நடாத்தப்பட்டு வருகின்றது.

இம் மன்றத்தின் பணிகள் மென்மேலும் வளர்ச்சியடைய எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் அமைப்புக்கள்.

1) பாடசாலை அபிவிருத்திச் சங்கம். (SDS)

அதிபரை பதவி வழித்தலைவராகவும், திருமதி.ச.தவராகினி செயலாளராகவும், திரு.இ.சரவணபவன் (ஆசிரியர்) பொருளாளராகவும் செயற்பட்டு வருகின்றனர். எமது பாடசாலையின் அபிவிருத்தியில் இச் சபையின் பங்கு போற்றுதற்குரியதாகும்.

இச் சங்கமானது பாடசாலைக்குத் தேவையான நிதிகளைச் சேகரித்தல், பாடசாலையின் கொள்கைத் திட்மிடல் பாடசாலை சம்பந்தமான நிதிச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற பல செயற்பாடுகளை நீதி நியாயத்துடன் மேற்கொண்டு வருகின்றது. இச் சபையானது தனது செயற்பாடுகளை மேலும் திறம்படச் செய்ய இந்நேரத்தில் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02) உலக உணவுத்திட்டம். (WFP)

சிறுதுளி பெருவெள்ளம் எனும் கூற்றிற்கு இணங்க எமது சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு பெரு வெள்ளம் போல் உணவளித்த உலக உணவுத்திட்டத்தை இந் நாளில் வாழ்த்துகின்றேன். அத்துடன் ஒருபானைத் திட்டத்திற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இதற்குப் பொறுப்பான ஆசிரியர் திருமதி.கோ.கருணகரன் அவர்களையும், தன்னலம் பாராது மாணவர்களுக்கு உணவினை சமைத்துக் கொடுக்கும் பெற்றோர் திருமதி.பா.சுமதினி அவர்களையும் இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

03) TSEP செயற்றிட்டம்.

மேற்படி செயற்றிட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்கு ரூபா.828000.00 பெறுமதியான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள இவ் வேளையில் இத்திட்டத்திற்காகச் சிறப்புடன் உழைத்த திரு.சி.கங்காதரன் அவர்களைப் பாராட்டுகின்றேன். இதற்கான குறை வேலைகளுக்கு ரூபா.200000.00 வரை தேவையுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) பாடசாலை வங்கிச் சேவை.

எமது பாடசாலையின் வங்கிச் சேவைக்குப் பொறுப்பாசிரியராக திருமதி. அ. மணிமேகலை அவர்கள் செயற்பட்டு வருகிறார். மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக வங்கியால் வழங்கப்படும் உண்டியலை பாடசாலையில் வைத்து தினமும் காலையில் மாணவர்கள் தங்களால் இயன்ற தொகையைப் போட்டு வங்கி மூலம் பரிசில் பெறுவதற்கு இவரது வழிகாட்டல் பெரிதும் உதவுகின்றது. இந் நேரத்தில் இவ் ஆசிரியையின் சேவை மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

05) பாடசாலை முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைக் குழு.

எமது பாடசாலையின் மேற்படி குழுக்களில் திரு. சி. ரவிச்சந்திரன், திரு. இ. சரவணபவன், திருமதி. செ. செல்வமணி, திருமதி. த. சுவாமிநாதன், திருமதி. க. இராஜரஞ்சன், திருமதி. கோ. மதிவர்ணன், திரு. கா. சயந்தன், ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலையின் திருத்த வேலைகள், புதிய கட்டடங்களைக் கட்டுதல் போன்ற சந்தர்ப்பங்களிலும், மதிப்பீடுகளிலும் இக் குழுக்களின் உதவி பெரும் பங்காகக் காணப்படுகின்றது. இக் குழுக்களானது தனது சேவையை மேலும் திறம்படச் செய்ய வேண்டுமென இந் நேரத்தில் வாழ்த்துகின்றேன்.

## எமது குறிப்பிடக்கூடிய தேவைகள்.

01) எமது பாடசாலையின் மிகவும் முக்கியமான தேவையாகப் பிரதான மண்டபம் அமைந்துள்ள வகுப்பறைக் கட்ட்டம் அமைந்துள்ளது. இடைநிலைப் பிரிவிற்காக உள்ள ஒரே ஒரு வகுப்பறைக் கட்டடம் இதுவாகும். இக்கட்டடம் சுண்ணாம்புக் கட்டடமாகக் காணப்படுவதால் இன்றோ நாளையோ இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே இக் கட்டடத்தை அகற்றி இதற்குப் பதிலாக புதிய கட்டடமொன்றை அமைத்து எமது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) எமது மாணவர்களின் கணினி அறிவை வளப்பதற்காக ஏற்கனவே உள்ள பழுதடைந்த கணனிகளைத் திருத்தவோ அல்லது புதிய கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கோ உதவும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

03) எமது மாணவர்கள் நூலக வசதியின்றி பெரும் சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர். சிறுதொகை நூல்களும், அலுமாரியில் வைத்துப் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நூலகம் ஒன்றைக் கட்டுவதற்கு உதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

4) எமக்காக ஒரு திறந்த வெளியரங்கோ அல்லது மண்டபமோ கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதனால் எமக்கு விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற காலங்களில் மேடைக்காக ஏற்படும் செலவு குறைவடையும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இன்றைய எமது விழாவிற்கு வருகை தந்துள்ள பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், இன்னும் யார் யாரையெல்லாம் தவற விட்டடேனோ அத்தனை பேருக்கும் நான் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். அத்தோடு இந்நூலை திறம்பட ஆக்கிய ஆசிரியர் திருமதி.துளசி வேந்தன் அவர்களுக்கும், அச்சுப் பதித்துத் தந்த புத்தூர் "சஜு" பதிப்பகத்தினருக்கும் எனது நன்றிகளைக் கூறி விடைபெறுகின்றேன்.

"நன்றி"
வணக்கம்

-அதிபர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசு பெறுவோர் விபரம் - 2013

| தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடம் |
|---|---|---|
| 01 | செல்வி.ச.சாணுயா | தமிழ்,சமயம்,கணிதம்,சுற்றாடல். |
| | செல்வி.நி.நிலானி | தமிழ்,கணிதம்,சுற்றாடல். |
| | செல்வன்.ச.லோஜிதன் | தமிழ்,கணிதம். |
| 02 | செல்வி.ஜெ.டேனுசா | தமிழ்,சமயம்,கணிதம்,சுற்றாடல். |
| | செல்வன்.ம.தனுசன் | கணிதம்,சுற்றாடல்.தமிழ். |
| | செல்வன்.ஜெ.ஜென்சிகன் | சமயம்,தமிழ். |
| 03 | செல்வன்.ஜெ.கஜந்தன் | தமிழ்,ஆங்கிலம்,கணிதம்,சுற்றாடல். |
| | செல்வி.இ.ஜீவதர்சினி | சமயம்,தமிழ்,சுற்றாடல். |
| | செல்வன்.யோ.திலக்சன் | சமயம்,தமிழ். |
| 04 | செல்வி.ஜெ.ஜென்சிகா | தமிழ்,சமயம்,கணிதம்,சுற்றாடல்.ஆங்கிலம். |
| | செல்வன்.க.விகுந்தன் | தமிழ்,சமயம்,சுற்றாடல். |
| | செல்வி.த.தர்சிகா | தமிழ்,சமயம்,ஆங்கிலம். |
| 05 | செல்வன்.இ.சுபாங்கன் | தமிழ்,சமயம்,கணிதம்,சுற்றாடல்.ஆங்கிலம். |
| | செல்வன்.சு.கார்த்தீபன் | தமிழ்,சுற்றாடல்.சமயம்,ஆங்கிலம். |
| | செல்வன்.ந.வினுசன் | தமிழ்,கணிதம். |
| 06 | செல்வன்.அ.யதுசாந் | சமயம்,விஞ்ஞானம்,சுகாதாரம்,சங்கீதம், வரலாறு,தொழில்நுட்பம். |
| | செல்வி.சு.கார்த்திகா | தமிழ்,கணிதம்.ஆங்கிலம்,புவியியல், குடியியல். |
| 07 | செல்வி.டிலானி | தமிழ்,கணிதம்.வரலாறு,புவியியல், சுகாதாரம்,தொழில்நுட்பம். |
| | செல்வி.த.தனுசா | விஞ்ஞானம்,ஆங்கிலம்,குடியுரிமை,சங்கீதம். |
| 08 | செல்வன்.தெ.சஞ்சீவன் | சமயம்,கணிதம்,விஞ்ஞானம்,வரலாறு, புவியியல்,சுகாதாரம்,தொழில்நுட்பம். |
| | செல்வன்.ர.தனுஸ்ரன் | தமிழ்,ஆங்கிலம்,குடியுரிமை. |
| 09 | செல்வி.அ.நிதூசனா | சமயம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,சுகாதாரம், குடியுரிமை,தொழில்நுட்பம். |
| | செல்வி.பூ.தர்சனா | தமிழ்,கணிதம்,ஆங்கிலம்,வரலாறு, புவியியல்,குடியுரிமை. |
| | செல்வி.பூ.தர்சனா | சங்கீதம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தரம் - 01 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன். ஆ.சதுர்சன்<br>செல்வி.ச.சாணுயா<br>செல்வி.ச.சாணுயா |
| தரம் - 02 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன். ஜெ.ஜென்சிகன்<br>செல்வி.ஜெ.டேனுசா<br>செல்வி.ஜெ.டேனுசா |
| தரம் - 03 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன்.ஜெ.கஜந்தன்<br>செல்வி.இ.ஜீவதர்சினி<br>செல்வி.நி.நிலக்சனா |
| தரம் - 04 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன்.த.தனுசாந்<br>செல்வி.ஜெ.ஜென்சிகா<br>செல்வி.ஜெ.ஜென்சிகா |
| தரம் - 05 | சிறந்த மாணவன்<br><br>வரவு ஒழுங்கு | செல்வன்.தெ.சதுசன்<br>செல்வன்.இ.சுதாங்கன<br>செல்வன்.இ.சுதாங்கன் |
| தரம் - 06 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.அ.யதுசாந்<br>செல்வி.சு.கார்த்திகா<br>செல்வன்.அ.யதுசாந்<br>செல்வன்.த.கஜீபன் |
| தரம் - 07 | சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வி.த.தனுசா<br>செல்வி.டிலானி<br>செல்வி.த.தனுசா |
| தரம் - 08 | சிறந்த மாணவன்<br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.தெ.சஞ்சீவன்<br>செல்வன்.தெ.சஞ்சீவன்<br>செல்வன்.ர.சிவதாருசன்<br>செல்வன்.ர.அபிதாஸ் |
| தரம் - 09 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.அ.நிதுசன்<br>செல்வன்.அ.நிதூசனா<br>செல்வி.அ.சஞ்சிகா<br>செல்வன்.இ.ராஸ்குமார்<br>செல்வன்.சி.சிவசாந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசு பெறுவோர் விபரம் - 2014

| தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடம் |
|---|---|---|
| 01 | செல்வி.ந.நசீபா | தமிழ்,சுற்றாடல்,சமயம்,கணிதம். |
| | செல்வி.கு.அகர்ஷா | சுற்றாடல்.தமிழ், சமயம். |
| | செல்வி.ஜெ.சகானா | கணிதம்,தமிழ்,சமயம். |
| 02 | செல்வி.ச.சாணுயா | தமிழ்,சுற்றாடல்,சமயம்,கணிதம், |
| | செல்வி.நி.நிலானி | கணிதம்,தமிழ்,சமயம். |
| | செல்வன்.ச.லோஜிதன் | கணிதம்,சமயம்,சுற்றாடல். |
| 03 | செல்வி.ஜெ.டேனுசா | தமிழ்,சமயம்,கணிதம்,ஆங்கிலம்,சுற்றாடல். |
| | செல்வன்.ம.தனுசன் | சமயம்,கணிதம்,தமிழ்,சுற்றாடல். |
| | செல்வன்.ம.தனுசன் | தமிழ்,சமயம், |
| 04 | செல்வி.ஜெ.லிதுசா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்.ஆங்கிலம்,சமயம். |
| | செல்வன்.ஜெ.கஜந்தன் | தமிழ்,சமயம்,சுற்றாடல். |
| | செல்வி.இ.ஜீவதர்சினி | சமயம்,தமிழ். |
| 05 | செல்வி.ஜெ.ஜென்சிகா | தமிழ்,சமயம்,கணிதம்,ஆங்கிலம், |
| | செல்வி.த.தர்சிகா | தமிழ்,சுற்றாடல்.ஆங்கிலம். |
| | செல்வன்.க.விகுந்தன் | சமயம்,தமிழ். |
| 06 | செல்வன்.சு.கார்த்தீபன் | சமயம்,தமிழ்,கணிதம்,சுகாதாரம்,வரலாறு, புவியியல். |
| | செல்வன்.இ.சுபாங்கன் | விஞ்ஞானம்,ஆங்கிலம்,சங்கீதம், தொழிநுட்பம். |
| 07 | செல்வன்.அ.யதுசாந் | கணிதம்,தமிழ்,ஆங்கிலம்,சங்கீதம்,வரலாறு, புவியியல்,குடியுரிமை,தொழில்நுட்பம். |
| | செல்வி.சு.கார்த்திகா | சமயம்,விஞ்ஞானம், சுகாதாரம். |
| 08 | செல்வி.த.தனுசா | தமிழ்,கணிதம்,ஆங்கிலம்,சுகாதாரம்,சங்கீதம், புவியியல்,குடியுரிமை,தொழில்நுட்பம். |
| | செல்வி.ர.டிலானி | சமயம், விஞ்ஞானம்,வரலாறு. |
| 09 | செல்வன்.தெ.சஞ்சீவன் | சமயம்,தமிழ்,விஞ்ஞானம்,சுகாதாரம், புவியியல்,குடியுரிமை,தொழில்நுட்பம். |
| | செல்வன்.ர.அபிதாஸ் | தமிழ்,கணிதம்,சங்கீதம்,வரலாறு, |
| | செல்வன்.ர.தனுஸ்ரன் | ஆங்கிலம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தரம் - 01 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன். ஜெ.நிலவன்<br>செல்வி.கு.அகர்ஷா<br>செல்வி.கு.அகர்ஷா |
| தரம் - 02 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன். ஆ.சதுர்சன்<br>செல்வி.சு.டிலக்சனா<br>செல்வி.ச.சாணுயா |
| தரம் - 03 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன். ஜெ.ஜென்சிகன்<br>செல்வி.ம.தனுசன்<br>செல்வி.ஜெ.டேனுசா |
| தரம் - 04 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன்.க.திலக்சன்<br>செல்வி.ஜெ.லிதுசா<br>செல்வி.நி.நிலக்சனா |
| தரம் - 05 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு | செல்வன்.க.விகுந்தன்<br>செல்வி.ஜெ.ஜென்சிகா<br>செல்வன்.தனுசாந் |
| தரம் - 06 | சிறந்த மாணவன்<br><br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.தெ.சதுசன்<br>செல்வன்.இ.சுதாங்கன்<br>செல்வன்.இ.சுதாங்கன்<br>செல்வன்.ந.வினுசன் |
| தரம் - 07 | சிறந்த மாணவன்<br>சிறந்த மாணவி<br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.த.கஜீபன்<br>செல்வி.சு.கார்த்திகா<br>செல்வன்.த.கஜீபன்<br>செல்வி.த.தனுசா |
| தரம் - 08 | சிறந்த மாணவி<br><br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வி.த.தனுசா<br>செல்வி.டிலானி<br>செல்வி.சி.சுகன்ஜா<br>செல்வி.த.தனுசா |
| தரம் - 09 | சிறந்த மாணவன்<br><br>வரவு ஒழுங்கு<br>சூழல் சுத்தம் | செல்வன்.ர.தனுஸ்ரன்<br>செல்வன்.ர.அபிதாஸ்<br>செல்வன்.ர.தனுஸ்ரன்<br>செல்வன்.ர.அரவிந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பரிசில்கள்.

01)2013ம், 2014ம்,2015ம்ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்காக ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி.க.கண்மணி அவர்களின் அன்பளிப்பு.

செல்வன் - சு.கார்த்தீபன்

செல்வன் - ந.வினுசன்

செல்வன் - இ.சுபாங்கன்

செல்வி - ஜெ.ஜென்சிகா

செல்வி - இ.ஜீவதர்சினி

செல்வன் - ஜெ.கஜந்தன்

02) 2015ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவி.

செல்வி - ஜெ.லிதுசா

03) 2015ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள்.

செல்வன் - ஜெ.கஜந்தன்

செல்வி - இ.ஜீவதர்சினி

04) 2013ம் ஆண்டு நடைபெற்ற கணித நாடகப்போட்டியில் கோட்ட மட்டம் - 01ம் இடம், வலயமட்டம் - 01ம் இடம், மாவட்டமட்டம் - 03ம் இடம் இந் நாடக நெறியாள்கை:

திருமதி.வி.சாந்தினி,

திரு.இ.சரவணபவன்.

05) 2014ம் ஆண்டு நடைபெற்ற கணித நாடகப்போட்டியில் கோட்ட மட்டம் - 01ம் இடம், வலயமட்டம் - 03ம் இந் நாடக நெறியாள்கை:

திருமதி.வி.சாந்தினி,

திரு.இ.சரவணபவன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழாவிற்காக இந்நூல் பதிப்புக்கு போகும் வரை அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | |
|---|---|
| ம.ஈசா | 200.00 |
| உலகநாதன் பாணுசா | 500.00 |
| க.சந்திரபோஸ் | 500.00 |
| ராயுகணபதி | 500.00 |
| கனகரட்ணம் மகேந்திரன் | 500.00 |
| சி.ஸ்ரீமோகன் | 500.00 |
| தியாகராசா கணேசலிங்கம் | 500.00 |
| K.தேவராசா | 500.00 |
| செ.துரைசிங்கம் | 500.00 |
| முருகுப்பிள்ளை சிவராசா | 500.00 |
| மகேஸ்வரன் பகீரதன் | 500.00 |
| த.கனகரத்தினம் | 500.00 |
| க.ஜெகதீசன் | 500.00 |
| லோ.சுதர்சன் | 500.00 |
| சி.ஜெகதீஸ்வரன் | 500.00 |
| P.அன்ரன் | 500.00 |
| இ.நிசாந்தன் | 500.00 |
| வீரசிங்கம் நற்குணம் | 500.00 |
| இ.நாகராஜா | 500.00 |
| சுரேஸ்குமார் | 500.00 |
| S.விஜயராணி | 500.00 |
| சு.தமிழினி | 500.00 |
| சி.குமாரசாமி | 500.00 |
| பொன்னுத்துரை ரவிச்சந்திரன் | 500.00 |
| Dr.புவிராசன் | 500.00 |
| இராசு யோகலிங்கம் | 500.00 |
| வீ.அன்ரனிதாஸ் | 500.00 |
| மா.தங்கவேலு | 500.00 |
| ச.சரன்ஜா | 500.00 |
| லட்சுமி சந்திரகுமார் | 500.00 |
| பாபு விஜேந்தினி | 500.00 |
| மா.அமுதலிங்கம் | 500.00 |
| சி.சசிகுமார் | 500.00 |
| து.உதயரஞ்சன் | 500.00 |
| மா.சந்திரலிங்கம் | 500.00 |
| கே.தெய்வேந்திரம் | 500.00 |
| சி.பாலேஸ்வரன் | 500.00 |
| ஜெ.ஜேமா | 500.00 |
| V.மதனசேகரம் | 1000.00 |
| இ.பரஞ்சோதி | 1000.00 |
| சின்னையா பாலசுப்பிரமணியம் | 1000.00 |
| V.கிருபானந்தராஜா | 1000.00 |
| ஜெ.டிதுசன் | 1000.00 |
| ஜி.கல்யாணி | 1000.00 |
| இளங்கதிர் ச.சமூக நிலையம் | 1000.00 |
| S.விஜயராணி | 1000.00 |
| செல்வக்கண்டு சிவலிங்கராஜா | 2000.00 |
| S.ஜெயவீரசிங்கம் | 2000.00 |
| தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன் | 3000.00 |
| திருமதி.க.கண்மணி (ஓய்வுநிலை ஆசிரியர்) பெயர் குறிப்பிட்ட பரிசில்களுக்கு) | 10000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் புகழ்பூத்த அதிபர்கள்.

1) திரு.ச.கிருஸ்ணபிள்ளை - (1932 - 1960)

2) திரு.சி.மயில்வாகனம் - (1960 - 1965)

3) திரு.க.பொன்னம்பலம் - (1965 - 1972)

4) திரு.ரி.வேலுப்பிள்ளை - (1972 - 1978)

5) திரு.எஸ்.முத்துக்குமாரசாமி - (1978 - 1982)

6) திரு.சி.சுந்தரலிங்கம் - (1982 - 1996)

7) திரு.சி.மகேஸ்வரதாசன் - (1996 - 2002)

8) திரு.சி.மாணிக்கவாசகர் - (2002 - 2007)

9)திரு.சு.மோகனராஜன் - (2007 - 30.04.2014)

10) திருமதி.வி.சாந்தினி - (01.05.2014 - 10.06.2014)

11) திரு.சி.ரவிச்சந்திரன் - (11.06.2014 இன்றுவரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

வாழிய வாழிய வாழியவே
எம் கலைக்கூடம் என்ஞான்றும் வாழியவே
(வாழியவே....)

பத்தமேனி என்னும் பழம் பெரும் பதியில்
மத்தியில் ஒளிவிடும் மணிவிளக்கெனவே
சித்தம் மிக மகிழ்ந்து சிறுவர் சிறுமியர்கள்
வித்தை பல பயின்று விளங்கி திகழ்ந்திடவே
(வாழியவே....)

இரத்தினேஸ்வரி எனும் அரும் பெயர் சூடி
பரத்தினில் உயர்ந்த பரசிவ நெறியை
சிரத்தை அன்புடனே சிறார்களின் உள்ளத்தில்
அருந்தி இவ் அவனியில் அரும்சேவை ஆற்றிட
(வாழியவே....)

செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புடன் கணிதம்
வித்தை பல பயின்று விஞ்ஞானம் தன்னொடு
சமூகத் துறையும் அழகியற் துறையும்
ஒருங்கே இணைந்து ஒன்றாக ஓங்கிட
(வாழியவே....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org